# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2024

### பிரிவு 2 ( 2017 ஆம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 7)

## விவிலிய வினாவிடைப் போட்டி

1. கடவுள் முதல் நாள் எதைப் படைத்தார்? **ஒளி**
2. ஆதிப்பெற்றோரின் பெயர் என்ன? **ஆதாம், ஏவாள்**
3. ஆதிப்பெற்றோரின் புதல்வர்கள் யாவர்? **காயின், ஆபேல்**
4. ஆபேலைக் கொன்றவர் யார்? **காயின்**
5. நோவாவின் காலத்தில் வெள்ளப்பெருக்கு எத்தனை நாட்கள் நீடித்தது? **40 நாள்**
6. நோவா வெள்ளப்பெருக்கு முடிந்த பின் முதன் முதலில் பேழையிலிருந்து வெளியே எப்பறவையை அனுப்பினார்? **ஒரு காகம்**
7. ஆபிரகாம் சாராவின் மகன் பெயர் என்ன? **ஈசாக்**
8. நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? **ஆபிரகாம்**
9. ஈசாக்கின் மனைவி பெயர் என்ன? **ரெபேக்கா**
10. ஈசாக்கின் புதல்வர்கள் யார்? **ஏசா, யாக்கோபு**
11. யாக்கோபிற்கு எத்தனை புதல்வர்கள்? **12**
12. மோசே எந்த ஆற்றிலிருந்து பார்வோனின் மகளால் கண்டெடுக்கப்பட்டார்? **நைல்**
13. அதிதூதர்கள் மூவர் யார்? **மிக்கேல், கபிரியேல், இரபேயேல்**
14. திருமுழுக்கு யோவானின் தந்தை பெயர் என்ன? **செக்கரியா**
15. மரியாளுக்கு இயேசுவின் பிறப்பை அறிவித்த வானதூதரின் பெயர் என்ன? **கபிரியேல்**
16. இயேசு எங்கே பிறந்தார்? **பெத்லேகேம்**
17. இயேசுவின் வளர்ப்புத்தந்தையின் பெயர் என்ன? **புனித சூசையப்பர்**
18. புனித சூசையப்பரின் தொழில் என்ன? **தச்சுத் தொழில்**
19. குழந்தை யேசுவுக்கு ஞானிகள் கொண்டுவந்த பரிசு எவை? **பொன், தூபம், வெள்ளைப்போளம்**
20. சிறுவன் இயேசு ஜெருசலேம் தேவாலயத்தில் காணாமல் போனபோது அவருக்கு வயது எத்தனை? **12**
21. இயேசு எங்கே திருமுழுக்கு பெற்றார்? **யோர்தான் நதிக்கரை**
22. இயேசு யாரிடம் திருமுழுக்கு பெற்றார்? **திருமுழுக்கு யோவானிடம்**
23. இயேசு திருமுழுக்கு பெற்ற போது தூய ஆவியார் எவ்வடிவில் தோன்றினார்? **புறா வடிவில்**
24. இயேசு செய்த முதல் புதுமை என்ன? **கானாவூர் திருமணத்தில் தண்ணீரை இரசமாக்கியது.**
25. எமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பிரான்சிஸ்**

**பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுத கற்றுக் கொள்ளுங்கள்**

"அருள் மிகப்பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்." லூக்கா 1: 28

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

### சாப்பிடும் முன் செபம்

அன்பு தந்தையே இறைவா, அனுதின உணவை எங்களுக்கு தருவதற்கு நன்றி. இந்த உணவையும், இதை தயாரிக்க உதவிய அனைவரையும் ஆசீர்வதித்தருளும். நாங்கள் உட்கொள்ளும் இவ்வுணவு எங்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தை தர உம்மை வேண்டுகின்றோம். ஆமென்.

# பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

நன்றியால் துதி பாடு நம் இயேசுவை
நாவாலே என்றும் பாடு -2
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் - 2

எரிக்கோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கின்றார் - 2
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும் - 2

செங்கடல் நம்மைச் சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் நிழலுண்டு - 2
பாடிடுவோம் துதித்திடுவோம்
பாதைகள் கிடைத்துவிடும் -2